தொழிலாளர் துறை


அனுப்புநர்
திரு.ஒ.ஜானகிராம்,
தொழிலாளர் துணை ஆணையர் –2(சமரசம்),கூ.பொ,
குறளகம் 3 ம் தளம், சென்னை–108.


பெறுநர்/மனுதாரர்,
1. The Divisional Head,
M/s. Doosan Power Systems India
Private Limited,
No. 18/2A, Seneerkuppam,
By-Pass Road, Poonamallee,
Chennai- 600 056.

எதிர்மனுதாரர்/நிர்வாகம்
2. The General Secretary
Doosan Employees Union,
No.42, Anjaneyar Koil Street,
Poonamallee, Chennai-600 056.

ந.க.எண். அ/201 /2021 நாள் . 01.07.2021

அய்யா,

பொருள் : 1947–ம் வருடத்திய தொழிற்தகராறுகள் சட்டம் – நிர்வாகம் தூசான் பவர் சிஸ்டம்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் 04.05.2021 தேதியிட்டு 365 தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்ய அனுமதி கோரியது – குறித்து - அரசாணை பிறப்பிக்கப்பட்டது – சார்வு செய்வது – தொடர்பாக.

பார்வை: 1) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை , அரசாணை (டி) எண். 261, நாள்.30.06.2021
2) சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் குறிப்பாணை எண் – A3/11400/2021, நாள். 01.07.2021.

-----

பார்வை 2–ல் காணும் தொழிலாளர் ஆணையர் அவர்களின் குறிப்பாணையில் தெரிவித்துள்ளவாறு தங்களது ஆட்குறைப்பு குறித்த விண்ணப்பம் தொடர்பாக இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட அரசாணை நிர்வாகத்திற்கும், தொழிற்சங்கத்திற்கும் சார்வு செய்யும் பொருட்டு அரசாணையின் அசல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அதனை இருதரப்பினரும் பெற்றுக் கொண்டு இக்கடித நகலில் அதற்கான ஒப்புகை கையொப்பம் இட்டுத் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1.7.21.

தொழிலாளர் துணை ஆணையர்– 2,
(சமரசம்) (கூ/பொ), சென்னை–108.

இணைப்பு மேற்படி

**சுருக்கம்**

தொழிற் தகராறு – ஆட்குறைப்பு – நிர்வாகம், தூசான் பவர் சிஸ்டம்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை – தொழிற் தகராறுகள் சட்டம், 1947 பிரிவு 25N-ன் கீழ் 365 தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்ய அனுமதி கோரிய மனு – நிராகரித்து ஆணை வெளியிடப்படுகிறது

---

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (அ1) துறை**

அரசாணை (டி) எண்.261 நாள் 30.06.2021

பிலவ வருடம், ஆனி – 16
திருவள்ளுவராண்டு 2052

படிக்க:

1. தூசான் பவர் சிஸ்டம்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், கடிதம் நாள் 04.05.2021 மற்றும் 23.06.2021
2. தொழிலாளர் ஆணையர் கடிதம் ந.க.எண் அ3/11400/2021, நாள் 16.06.2021
3. தூசான் தொழிலாளர் சங்கத்தின் கடிதம் நாள் 05.06.2021 மற்றும் 12.06.2021

---

**ஆணை :**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் சென்னை, தூசான் பவர் சிஸ்டம்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிர்வாகம் தங்கள் நிறுவனம் Boiler Pressure Parts, Pannel, Header & Coil Designing, Building, Installation மற்றும் Thermal and Coal Power Plant-களை பராமரிக்க ஏற்படுத்தப்பட்ட நிறுவனமாகும் என்றும், அந்நிறுவனம் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக நஷ்டத்தில் இயங்குவதாலும், நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதாலும், 365 தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்ய தொழிற்தகராறுகள் சட்டம், 1947 பிரிவு 25N-ன்படி அனுமதி கோரி அரசுக்கு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தொழிலாளர் ஆணையர், 2010–ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் தூசான் பவர் சிஸ்டம்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தில் 320 நிரந்தரத் தொழிலாளர்களும் 305 அலுவலகப் பணியாளர்களும் 546 ஒப்பந்த தொழிலாளர்களும் மற்றும் 250 தொழிலாளர்கள் சப்–காண்ட்ராக்டர்கள் என்ற வகையில் பணிபுரிந்து வந்ததாகவும் நிர்வாகம் தங்கள் தொழிற்சங்கத்தினை அங்கீகரிக்க மறுத்து, தொழிற்சாலையில் நிர்வாகமே அவர்களது கட்டுப்பாட்டிற்குள் அமைந்த மிகச் சிறிய எண்ணிக்கையிலான தொழிலாளர்களைக் கொண்ட ஒரு தொழிற்சங்கத்தினை உருவாக்கி, அவர்களை மட்டுமே அங்கீகரித்து, பெரும்பான்மை தொழிலாளர்களை கொண்ட தங்களது தூசான் தொழிலாளர் சங்கத்தினை நிராகரித்து வருவதாகவும் இதன் காரணமாக மேற்படி நிர்வாகத்திற்கு எதிரே 1947, தொழிற்தகராறுகள் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் தொழிற் தாவாக்களை தாக்கல் செய்துள்ளதாகவும் மாண்புமிகு உயர் நீதிமன்றம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றம் ஆகியவற்றில் பல்வேறு வழக்குகளை தாக்கல் செய்துள்ளதாகவும் இவ்வாறான

சூழலில் தொழிலாளர்களின் ஆட்குறைப்பு குறித்து விண்ணப்பம் தாக்கல் செய்து இருப்பது ஏற்கத்தக்கதல்ல என தூசான் தொழிலாளர் சங்கம் தனது ஆட்சேபனை கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது என தெரிவித்துள்ளார். மேலும், கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து ஏற்பட்டு வரும் வர்த்தக சரிவு நிறுவனத்தை மிகக்கடுமையாக பாதித்துள்ளது என்றும் தொடர்ந்து எவ்வித ஆர்டர்களும் பெறப்படாத நிலையில் 2020–ல் ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்று மற்றும் பொது முடக்கம் காரணமாக புதிய ஆர்டர்கள் எதுவுமில்லை என்றும் நிறுவனத்தில் தொடர்ந்து கடந்த 5 ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள நஷ்டத்தால் நிறுவனத்தில் பணப்புழக்கம் அறவே இல்லையென்றும் மூலதனம் குறித்து கடன் பெறவேண்டிய நிலைமை இருப்பதால் தற்போது ஆட்குறைப்பினை முன்மொழிந்துள்ளதாக நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

3. தூசான் பவர் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிர்வாகம் ஆட்குறைப்பிற்கு தெரிவித்துள்ள வர்த்தக சரிவு, போதுமான ஆர்டர்கள் பெறப்படாதது மற்றும் பணப்புழக்கம் இல்லாமை ஆகியவை பொதுவான பொருளாதார காரணங்களாக உள்ளது என்றும் தூசான் தொழிலாளர் சங்கம் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட புகார் மனுக்கள் மற்றும் தொழிற்தாவாக்கள் தொழிலாளர் நலத்துறை, தொழிலாளர் நீதிமன்றம் மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் முன்னர் விசாரணைகள் நிலுவையில் உள்ளதால் நிர்வாகத்தின் ஆட்குறைப்பு தொழிலாளர்களை பழிவாங்கும் விதமாக உள்ளது என தொழிலாளர் ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும் தூசான் பவர் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிர்வாகத்தின் 15.04.2021 நாளிட்ட ஆட்குறைப்பு அறிவிப்பு (படிவம் R2) அந்நிர்வாகத்தின் 04.05.2021 நாளிட்ட கடிதத்தின் மூலம் அரசுக்கு முகவரியிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் இதிலிருந்து ஆட்குறைப்பிற்கான அறிவிப்பு 15.04.2021 நாளிட்டு தொழிலாளர்களுக்கு அனுப்பிய பின்னரே அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது என தெரியவருகிறது என்றும் அரசிடம் உரிய முன்னனுமதி பெறாமலேயே நிர்வாகத்தால் 15.04.2021 நாளிட்ட அறிவிப்பு அளிக்கப்பட்டுள்ளது சட்டத்திற்கு புறம்பான மற்றும் நிர்வாகத்தின் தொழிலாளர் விரோத போக்கு என்றும் தொழிலாளர் ஆணையர் தெரிவித்துள்ளார். நிறுவனத்தில் பணிபுரியும் நிரந்தர தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரை ஆட்குறைப்பு செய்ய விண்ணப்பித்துள்ள நிலையில் நிர்வாகம் அந்நிறுவனத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் ஆகியோர் குறித்த நிலை குறித்து விபரம் ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் நிர்வாகம் 365 தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்துவிடும் நேர்வில் அலுவலர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை கொண்டு நிறுவனம் தொடர்ந்து செயல்படுத்த வாய்ப்புள்ளது என்ற சந்தேகமும் எழுகிறது என்றும் இதனால் ஆட்குறைப்பிற்கு நிர்வாகம் தெரிவிக்கும் நிதிப்பற்றாக்குறை உண்மையானதா என்ற வினா எழுகிறது என்றும் ஆட்குறைப்பு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டால் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் தொழில் அமைதி பாதிக்கப்பட வாய்ப்பு உருவாகும் என கருதுவதால் நிர்வாகத்தின் ஆட்குறைப்பு அனுமதி கோரி பெறப்பட்ட விண்ணப்பத்தை நிராகரிக்கலாம் என தொழிலாளர் ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. தூசான் பவர் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிர்வாகம் அரசிடம் அளித்த ஆட்குறைப்பு விண்ணப்பத்தினை பரிசீலித்து உரிய உத்தரவுகளை பிறப்பிக்கும் பொருட்டு தூசான் பவர் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிர்வாகம் மற்றும் தூசான் தொழிலாளர் சங்கம் ஆகியோரிடம் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் செயலாளர் அவர்களால் 23.06.2021 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இரு தரப்பினரும் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

5. அரசு இரு தரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் கவனமுடன் பரிசீலித்தது. இந்நிர்வாகம் 365 நிரந்தர தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்யவும், 113 அலுவலர்களை பணியில் வைத்துக் கொள்ளவும் கருதியுள்ளது. நிர்வாகத்தின் பொருளாதார சரிவை சீர்

செய்யவே இந்த நடவடிக்கை என தெரிவித்துள்ள நிர்வாகம் 113 அலுவலர்களின் ஊதியத்தை சிறிது குறைத்துள்ளதாக தெரிவித்துள்ளது. தொழிற்சாலையின் வளர்ச்சிக்கு உதவிய தொழிலாளர்களையும் இது போன்று நடவடிக்கை மேற்கொண்டு தக்க வைத்துக் கொள்ள நிர்வாகம் கருதியிருக்கலாம். கோவிட்–19 முழு ஊரடங்கு முன்பு வரை 3 shift இயங்கிக் கொண்டிருந்த நிறுவனம் 2016–17–லிருந்து ஆர்டர் இல்லை என்று நிர்வாகம் தெரிவித்துள்ளதற்கு போதுமான ஆதார ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. நிர்வாகத்தின் பொருளாதார நிலைமை சீர்குலைந்துள்ளதாகவும் அதனை சரி செய்ய உள்ள ஒரே வழி ஆட்குறைப்பு தான் என்று நிர்வாகம் தெரிவித்திருப்பது ஏற்புடையதாக இல்லை. கடந்த சில காலமாகவே நாட்டில் பல்வேறு தொழிற்சாலைகளில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில் பொருளாதாரத்தை உயர்த்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர இவ்வாறு ஆட்குறைப்பு அறிவித்திட தேவையில்லை.

மேலும், அரசுக்கு ஆட்குறைப்பு முன் அனுமதி கோரும் விண்ணப்பம், தமிழ்நாடு தொழிற் தகராறுகள் சட்ட விதிகளின்படி அனுப்பும் அதே நேரத்தில் தொழிற்சங்கத்திற்கும் அறிவிப்பு அளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இந்நிர்வாகம், இதற்கு முரணாக அரசுக்கு அனுமதி கோரிய விண்ணப்பம் அனுப்பிய நாளான 04.05.2021 அன்றைக்கு முன்னதாகவே அதாவது 15.04.2021 அன்றே தொழிற்சங்கத்திற்கு அறிவிப்பு அனுப்பியிருப்பது தொழிற்தகராறுகள் சட்ட விதிகளுக்கு முரணானதாகும்.

இவ்வாறு ஆட்குறைப்பு தொடர்பாக கடைபிடிக்க வேண்டிய சட்ட விதிகளை நிர்வாகம் முழுமையாக பின்பற்றி தொழிலாளர்களுக்கு உரிய அவகாசம் அளிக்காமலும், அரசின் முன் அனுமதியை பெறாமலேயே அனுமதி விண்ணப்பத்தில் கண்ட தொழிலாளர்களில் 47 தொழிலாளர்களுக்கு பணிநீக்க அறிவிப்பு அளித்து அவர்களின் வங்கிக் கணக்கில் இறுதி தொகையினை செலுத்தியிருப்பது நிர்வாகத்தின் தன்னிச்சையான செயலாகும். தொழிற் தகராறுகள் சட்டப்படியும் முரண்பட்ட செயலாகும். இந்நிலையில் ஆட்குறைப்பு அனுமதி வழங்குவது சட்டப்படி சரியானதல்ல. தொழிற் தகராறுகள் சட்ட விதிகளை முறையாக பின்பற்றாமல் ஆட்குறைப்பு விண்ணப்பத்திற்கு அனுமதி கோருவது, தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் தொழில் அமைதி பாதிக்கப்பட வாய்ப்பு உருவாகும் என கருதப்படுகிறது.

6. மேற்காணும் சூழலில் தூசான் பவர் சிஸ்டம்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிர்வாகம் தரப்பில் 365 தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்யக்கோரி தெரிவித்த விவரங்கள் வலுவான/போதுமான காரணங்களாக இல்லை என்பதாலும் ஆட்குறைப்பு நடவடிக்கைகளில் நிர்வாகம் சட்டப்படியான நடைமுறைகளை பின்பற்றவில்லை என்பதாலும் தொழிற்தகராறுகள் சட்டம் 1947, பிரிவு 25N–ன் கீழ் ஆட்குறைப்பு கோரி சென்னை தூசான் பவர் சிஸ்டம்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிர்வாகம் அரசுக்கு விண்ணப்பித்த மனுவினை நிராகரிக்கலாம் என அரசு கருதி அவ்வாறே ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஆர். கிர்லோஷ் குமார்
அரசுச் செயலாளர்

<u>பெறுநர்</u>

1. நிர்வாகம்,
   தூசான் பவர் சிஸ்டம்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்,
   18/2A, சென்னீர் குப்பம் பைபாஸ் ரோடு,
   பூவிருந்தவல்லி, சென்னை – 600 056.
   (தொழிலாளர் ஆணையர், சென்னை –6 வழியாக)

2. தூசான் தொழிலாளர்கள் சங்கம்,
நெ.42, ஆஞ்சநேயர் கோவில் தெரு, பூவிருந்தவல்லி,
சென்னை – 600 056.
(தொழிலாளர் ஆணையர், சென்னை –6 வழியாக)

நகல்:

தொழிலாளர் ஆணையர், சென்னை– 600 006.
தொழிலாளர் துணை ஆணையர் (சமரசம்), சென்னை – 600 108.
அரசு செயலரின் முதுநிலை தனிச் செயலர்,
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை – 600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (அநமு–II) துறை, சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / சுத்த நகல் (கோ. எண்.8348/அ1/2021).

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

இ. அமராமி
30/6/21
பிரிவு அலுவலர்

30/6/21